குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.

சி.சி. 196/2020

2022-ம் ஆண்டு செப்டம்பர் 15-ம் தேதி வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சி-1 (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு. சேகர் | வயது | : 63 |
| த/பெ | : மாரி | தொழில் | : |
| ஊர் | : வெள்ளாளபுரம் | சமயம் | : |
| வட்டம் | : | ஜாதி | : |
| மாவட்டம் | : | | |

<u>முதல் விசாரணை :</u>

நான் வெள்ளாளபுரத்தில் குடியிருந்து சலூன் கடை வைத்துள்ளேன். விபத்தில் இறந்த வரதராஜன் எனது மகன் ஆவார். கடந்த 09.06.2019-ம் தேதி தேதி இரவு 7.00 மணியளவில் பனங்காட்டுரை சேர்ந்த ராஜமாணிக்கம் என்பவர் எனது மகன் எட்டிகுட்டை மேட்டிலிருந்து பாப்பம்பாடி நோக்கி வந்து கொண்டிருந்தபோது செங்கல் சூளை அருகே சங்ககிரியை நோக்கி வந்த டிவிஎஸ் இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டு எடப்பாடி அரசு மருத்துவமனைக்குச் சென்று பார்த்தேன்.மேல்சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிய நிலையில் சிகிச்சை பலனிற்றி இறந்து விட்டார். எனது மகனுக்கு கால் உடைந்து பின்னந்தலையில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. அது தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த ஆவணம் அ.த.சா.1 ஆக குறியீடு செய்ப்படுகிறது. போலீஸார் விசாரித்தனர்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

விபத்து குறித்த நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

மறு விசாரணை இல்லை.

ஓம்/- கே.யுவராஜ்,
நீதித்துறை நடுவர், ஓமலூர்,

குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.

சி.சி. 196/2020

2022-ம் ஆண்டு செப்டம்பர் 15-ம் தேதி வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சி-2 (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு. ராஜமாணிக்கம் | வயது | : 63 |
| த/பெ | : பழனிச்சாமி | தொழில் | : தறி மற்றும் விவசாயம் |
| ஊர் | : பனங்காட்டுர் | சமயம் | : |
| வட்டம் | : | ஜாதி | : |
| மாவட்டம் | : | | |

முதல் விசாரணை :

சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் மாலை 7.00 மணிக்கு சங்ககிரி போகும் சாலையில் சேகரின் மகன் சின்னப்பம்பட்டி நோக்கி நடந்து வந்து கொண்டிருந்தபோது பின்னால் வந்த இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது. மேற்படி இரவு 7.00 மணிக்கு விபத்து நடந்தது. என் வீட்டருகே தான் விபத்து நடந்தது. மேற்படி வாகனத்தை யார் ஓட்டி வந்தது எனக்குத் தெரியாது நான் பார்க்கவில்லை. உடனே நான் சேகருக்கு தகவல் தெரிவித்தேன். காயம்பட்டவருக்கு பின்னந்தலையிலும், காலிலும் பலத்த காயம் ஏற்பட்டிருந்து 108 ஆம்புலன்ஸுக்கு தகவல் தெரிவித்து அனுப்பி வைத்தேன்.போலீஸார் விசாரித்தனர்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :

நான் விபத்து நடந்தபோது வீட்டிற்குள் தறி ஓட்டி வந்தேன் விபத்தை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான்

மறு விசாரணை இல்லை.

ஒம்/- கே.யுவராஜ்,

நீதித்துறை நடுவர், ஓமலூர்,

குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.

சி.சி. 196/2020

2022-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15-ம் தேதி வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சி-3 (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு. கே.குமாரசாமி | வயது | : 61 |
| த/பெ | : கந்தசாமி | தொழில் | : தறி மற்றும் விவசாயம் |
| ஊர் | : பாப்பம்பாடி | சமயம் | : |
| வட்டம் | : | ஜாதி | : |
| மாவட்டம் | : | | |

முதல் விசாரணை :

நான் பாப்பம்பாடியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் எனது வீட்டருகே சங்ககிகரி சாலையில் ஒரு பையன் சின்னப்பம்பட்டி நோக்கி நடந்து வந்து கொண்டிருந்தபோது சங்ககிரி நோக்கி வந்த இருசக்கர வாகனம் மோதி விபத்தை ஏற்படுத்தியது. அந்த பையன் அடிப்பட்டு இருந்ததாகவும், மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும் சிகிச்சை பலனின்றி இறந்து விட்டதாகவும் சொன்னார்கள். மறுநாள் தாரமங்கலம் போலீஸார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் தயார் செய்து அதில் நான் முதலாவதாக கையொப்பம் செய்தேன். அந்த பார்வை மகஜர் அ.த.சா.2 ஆகும். என்னுடன் மணி என்பவரும் கையெபாப்பம் செய்தார். போலீஸார் என்னை விசாரித்தனர்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

பார்வை மகஜரில் உ ள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

மறு விசாரணை இல்லை.

ஓம்/- கே.யுவராஜ்,

நீதித்துறை நடுவர், ஓமலூர்,